1975 எப்ரல் 2]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, நான் முதலிலே குறிப்பிட்டபடி, புதிய சட்டம் விரைவாக அமுலாக்கப்பட்டிருக்கிறது அது ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறது. மானேஜ்மென்ட்டாரும் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று கூறுகிறது. மானேஜ்மென்ட்டாருக்கும் ஆசிரியருக்கும் விதிமுறைகள் அதில் கூறப்பட்டிருக்கின்றன. விதிமுறைகளை நாம் தெளிவாக வைத்திருக்கிறோம். காலதாமதம் ஏற்படாமல் விரைவாகத் தீர்க்கப்படக் கூடிய நிலையில் வைத்திருக்கிறோம். அதற்காக, நீதிபதிகளை நியமிக்க அரசு திட்டம் வகுத்திருக்கிறது. விரைவிலே நடவடிக்கை எடுக்க அரசு ஏற்பாடு செய்து வருகிறது.

திரு. எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, தனியார் பள்ளிகளையும், தனியார் கல்லூரிகளையும் அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கை வலுப்பட்டு இருக்கிறது. இங்கே, உயர்நிலைப் பள்ளிகளுக்குச் சுயாதிகாரம் வேண்டுமென்ற கோரிக்கையும் அது நல்லதல்ல என்று அமைச்சராலும் சொல்லப் படுகிறது. ஆகவே, சுயாதிகாரம் வேண்டுமென்று கூறுவதற்குக் காரணம், மாநிலத்திற்கு சுயாதிகாரம் கோருவதுதான், அதன் விளைவாகத்தான் இது வளர்ந்து வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. பல்கலைக் கழகம் அட்டானமஸ் ஸ்டேட்டஸ் பெற்றிருக்கிறது. கல்லூரிகளுக்கும் அட்டானமஸ் ஸ்டேட்டஸ் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசு அமைச்சகம் சொல்லியிருக்கிறது, கல்லூரி களாலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இங்கே ஒரு கருத்தரங்கிலே 4 தலைப்புகளை எடுத்துக்கொண்டு அதிலே விவாதத்திலே, கூறப்பட்டிருக்கிறதே தவிர, அது கோரிக்கை வடிவிலே, அல்லது தீர்மான வடிவிலே செய்ய வேண்டு மென்று அவர்கள் கோரவில்லை. அதைப்பற்றி விவாதித்திருக்கிறார்கள் அவ்வளவுதான் நமக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பள்ளிக் கட்டடங்கள்

* 522 வினா—**திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1974-75 பொதுப்பணித்துறை பட்ஜெட்டில் (Detailed public works Budget for 1974-75) பணம் ஒதுக்கீடு செய்யப் பெறப்பட்ட தோவாளை, கொட்டாரம், தாழக்குடி, திருப்பதிசாரம் திட்டுவிளை, ரத்தினபுரம், அழகப்பபுரம், வழுக்கம்பாறை, ஒற்றயால்விளை, கனகப்பபுரம் முதலிய ஊர்களில் பள்ளிக் கட்டடங்களுக்கான வேலை எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : விவர அறிக்கை@ சட்டப் பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. வீ. கே. இராஜாப் பிள்ளை : தலைவரவர்களே, இந்த விவர அறிக்கையில் 12 பள்ளிகளுக்கான குறிப்புகள் கொடுத்திருப்பதோடுகூட, 7 பள்ளிகளுக்கான கட்டிடங்களைப் பொறுத்தவரை 1974–75-ம் வருஷம் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து கட்டிட வேலைகள் துவங்கப்படவேயில்லையென்றும் கூறப்பட்டிருக்கிறது. அதோடு, 1975–76-லும் அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. அப்படியென்றால் இந்த வேலைகள் எல்லாம் எப்படி நடத்தப்படும், நடத்துவார்கள் என்பது சந்தேகமாக இருக்கிறது. ஏனென்று கேட்டால், இதில் குறிப்பிடப்படாத சில பள்ளிகளுக்கு, 1974–75-ல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, வேலை தொடங்கப்படாமலிருந்தும் இந்த வருஷம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, அதற்கு அமைச்சர் விளக்கம் கூறுவதோடு கூட தோவாளை உயர்நிலைப்பள்ளி, 1974 மார்ச்சில் துவங்கியிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. துவங்கியிருப்பது உண்மைதான். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியைக் கேளுங்கள். அவர் ஸ்டேட்மென்ட் வைத்தார் என்பதற்காக, நீங்கள் ஸ்டேட்மென்ட் வைத்தால் எப்படி ?

திரு. வீ. கே. இராஜப் பிள்ளை : இதுவரை ரூ. 10,000 தான் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அதுவும் கட்டி முடிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்த விவர அறிக்கையிலே தெளிவுபட குறிப்பிடப்பட்டிருக்கிறது. சில பள்ளிக் கூடங்களுக்கான கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன, சிலவற்றைப் பொறுத்தவரையில் பொறியியல் துறை மதிப்பீடுகளைத் திருத்த வேண்டியிருக்கிறது, சில கட்டடங்களைப் பொறுத்தவரையில் மதிப்பீடு அவர்கள் போட வேண்டியவர்களாக இருக்கிறார்கள், சில பள்ளிக் கட்டடங்களைப் பொறுத்தவரையில் பொறியியல் துறையினரிடம் தகவல்கள் கேட்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இந்த முறையிலே எவ்வளவுக்கெவ்வளவு நிறைவேற்ற இயலுமோ அவற்றை பொதுப்பணித்துறைக்கு கல்வித் துறை எடுத்துச் சொல்லும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, பல்வேறு இடங்களிலே நல்ல கட்டடங்கள் இல்லாமல் ஓலைக் கொட்டகையிலே பல பள்ளிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களிலே உள்ளவைகளையாவது

---

* 533– -ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

1975 ஏப்ரல் 2]

மாற்றி நல்ல கட்டடங்களாக மாற்றி தருகின்ற முறையிலே திருத்தியமைக்கின்ற முறையிலே அவற்றிற்காக முன்னுரிமை வழங்குவதற்கு இலாகா ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: கட்டடங்களுக்காக ஒரு குறிப்பிட்ட அளவிலே தான் நாம் நிதியை ஒதுக்குகிறோம், அந்த நிதியை மாவட்ட அளவிலே பிறகு ஒதுக்கித் தருகிறோம், அதற்குக் கட்டடக் குழுவினர் தருகின்ற ஒத்துழைப்பின் அடிப்படையிலேயும் ஊராட்சி ஒன்றியங்கள் மன்றங்கள் ஆகியவை தருகின்ற ஒத்துழைப்பின் அடிப்படையிலேயும் அரசு ஈட்டு மானியம் மற்றவையும் தந்து முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அந்த அந்த மாவட்டங்களிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போன்று மிகவும் கட்டட வசதிகள் இல்லாத இடங்களுக்கு முதலிடம் தர வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

அரசு உயர்நிலைப்பள்ளி, கன்னிகைப்பேர்

* 523 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் வட்டம், கன்னிகைப்பேரில் அமையும் அரசு உயர் நிலைப்பள்ளிக் கட்டடம் கட்டும் திட்டம் விரைவு படுத்தப்பட உள்ளதா?

(இ) ஆம் எனில், இப்பணி எப்போது முடிவடையும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) கன்னிகைப்பேரில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளிக்கு கட்டிடம் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

செம்பனார்கோயில் ஒன்றிய மருத்துவமனைகள்

* 524 வினா—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் செம்பனார் கோயில் ஒன்றிய பராமரிப்பில் உள்ள திருக்கடையூர், பரசலூர் மருத்துவமனைகளை நடப்பு ஆண்டில் அரசு மேற்கொள்ளும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.